DAILY THANTHI

தினத்தந்தி

24-1-2007




# சென்னை அட்வர்டைசிங் கிளப் பொன்விழா

## சாதனையாளர்கள் கவுரவிக்கப்பட்டனர்

சென்னை, ஜன.24-

சென்னை அட்வர்டைசிங் கிளப் அமைப்பின் பொன்விழா நடந்தது. இந்த நிகழ்ச்சியில் பொன்விழா நினைவு புத்தகம் வெளியிடப்பட்டது. சென்னை அட்வர்டைசிங் கிளப்பின் 50 ஆண்டு கால வரலாறு, தென்னிந்தியாவில் விளம்பரத்துறையின் வளர்ச்சி பற்றிய இந்த புத்தகத்தை ஆர்.கே.சாமி பி.பி.டி.ஓ. நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் கே.சுவாமி வெளியிட்டார், முதல் பிரதியை 'இந்து' நாளிதழின் நிர்வாக இயக்குனர் என்.முரளி பெற்றுக்கொண்டார்.

விளம்பரத்துறையில் சாதனை படைத்தவர்கள், சென்னை அட்வர்டைசிங் கிளப்பின் முன்னாள் தலைவர்கள் 14 பேர்களுக்கு பரிசுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டனர். கிளப் தலைவர் ரஞ்சுகுமார் மோகன், பொன்விழா குழுத்தலைவர் ஆர்.வி.ராஜன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.